தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1995, நவம்பர் 9, வியாழக்கிழமை

ஐப்பசி 23, யுவ—திருவள்ளுவர் ஆண்டு 2026

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"*

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறருக்குப் பயனுடையவர்களாக விளங்குபவர்களின் உயர்ந்த பண்பை, மக்கள் அனைவரும் பாராட்டிப் போற்றுவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள், வினா எண் 61, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்:

61—

மருத்துவ பரிசோதனைக் கட்டணத்தை உயர்த்துதல்

***39616*—திரு. கே. ஆர். முருகானந்தம் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சகங்களில் ஈய அச்சுப் பிரிவில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைக் கட்டணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசு அச்சகத்தில் வேலை செய்கிற ஈய அச்சுப் பிரிவில் பணிபுரிவோர்களுக்காக 1987 ஆம் ஆண்டிலிருந்து 10 ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 28-5-1993-லிருந்து புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின் பேரில் 10 ரூபாய் என்று இருந்ததை உயர்த்தி 25 ரூபாயாகக் கொடுக்கப்பட்டது.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு கொடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா; அவர்களுக்கு மகப்பேறு விடுப்பு - மெட்டர்னிட்டி லீவ் - கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகப்பேறு விடுப்பு, அரசு அச்சகத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு, இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்ன காரணத்தினாலோ கொடுக்கப்படாமல் இருந்தது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடன் அவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் 90 நாட்கள் மகப்பேறு விடுப்பு அறிவித்திருக்கிறார்கள்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் காக்கும் அரசாக இருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பதவி ஏற்றதற்குப் பின்னாலே அரசு அச்சகத்திலே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு என்ன என்ன சலுகைகள், நன்மைகள், திட்டங்களை அறிவித்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே், அறிவித்த திட்டங்கள் பல. எல்லா திட்டங்களையும் வரிசைப்படுத்தி இங்கே சொல்லாவிட்டாலும், ஒன்றிரண்டை மட்டும் இங்கே நான் சொல்கிறேன். 'வேர்-ஹவுஸ்'-ல் பணிபுரிபவர்களுக்கு முதலில் 800 ரூபாயிலிருந்து 1125 ரூபாயாக இருந்தது. இந்த அரசு வந்தவுடன் 950 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல எழுத்தர்களுக்கு ரூ. 825-லிருந்து 1200 ரூபாயாக இருந்ததை ரூ. 1200-லிருந்து ரூ. 2040 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோலவே பெயிண்டிங்

1995 நவம்பர் 9]

செய்பவர்களுக்கெல்லாம் 1100 ரூபாயிலிருந்து 1200 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோல அங்கு பணிபுரிபவர்களுக்கு ஈட்டிய விடுப்பு 180 நாட்களாக இருந்ததை 240 நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோல வேலை நேரங்களும் மாற்றப்பட்டிருக்கின்றன. அங்கே பணிபுரியும் தொழிலாளர்கள் எல்லோருக்கும் மருத்துவ விடுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 12 மாதங்களாக இருந்ததை 18 மாதங்களாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு நன்மைகள். அதுமட்டுமல்ல, நாள் ஒன்றுக்கு இரவுப்படி ரூ. 2.50 ஆக இருந்தது ரூ. 3.50 ஆக மாற்றப்பட்டிருக்கிறது. தேநீர் படி 20 ரூபாயாக இருந்தது 30 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. 'மில்க் அலவன்ஸ்' 60 பைசாவாக இருந்தது, 120 பைசாவாக மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு நன்மைகள், அவர்கள் கேட்ட அத்தனையும் செய்யப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு அரசுத் துறையின் அச்சுக் கூடங்கள் இருக்கின்றன ? அவைகள் இலாபத்தில் நடைபெறுகின்றனவா? அரசு சார்பாக அச்சடிக்கப்படுகின்ற அனைத்தும் அரசு அச்சகங்களிலே அச்சடிக்கப்படுகின்றனவா ? சில நேரங்களில் தனியார்களுக்கு அச்சடிக்கும் வேலையைக் கொடுப்பதால், அரசு அச்சு இயந்திரங்களுக்கும், அங்கு வேலை செய்யும் ஆட்களுக்கும் வேலைப்பளு குறைந்துவிடுவதோடு, அந்த அரசு அச்சகத்தில் லாபம் ஏற்படாத சூழ்நிலை ஏற்படுகிறது. மாவட்ட அளவிலே, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினால் அச்சடிக்கப்படுகின்ற இன்விடேஷன் மற்றும் எல்லா பிரிண்ட்களும் அதுபோல இப்போது நடைபெறவிருக்கிற உள்ளாட்சித் தேர்தலுக்காக அச்சடிக்கப்படவிருக்கும் வாக்காளர் அட்டையிலிருந்து அத்தனையும் அரசு கூட்டுறவு அச்சகங்களிலே அச்சடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டைச் சொன்னார்கள். ஒன்று அரசு கூட்டுறவு அச்சகம், மற்றொன்று அரசு அச்சகம். அரசு அச்சகம் தான் என்னுடைய மேற்பார்வையில் உள்ளது. அரசுக் கூட்டுறவு அச்சகம் என்னுடைய மேற்பார்வையிலில்லை. இருந்தபோதிலும், இன்றைக்கு அரசுக்கு

வேண்டிய அத்தனை எழுதுபொருள்கள் மற்றும் ஃபாரங்கள் அனைத்தும் அரசு அச்சகத்தின் மூலமாகத்தான் அச்சடிக்கப்படுகின்றன. அதேபோல உள்ளாட்சித் தேர்தலானாலும், சட்டமன்றத் தேர்தலானாலும், அரசு அச்சகத்தின் மூலமாக அச்சடிக்கப்படுவதால்தான் அவைகள் ஒழுங்காக அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றன. சில நேரங்களில் அரசு அச்சகத்திற்கு அதிகமான வேலைப்பளு இருந்தால், அவசர காலங்களில் அரசுத் தொடர்புடைய, கூட்டுறவு சங்கத்தினால் நடத்தப்படுகின்ற அச்சகங்களில் அச்சடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 62, டாக்டர் மு. சீனியம்மாள் மற்றும் திரு. தி. சாத்தையா. திரு. தி. சாத்தையா இருக்கையில் இல்லை, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

62—

ஜிர்கோனியம் ஸ்பாஞ்ச் திட்டத்திற்கு நிலம் ஒதுக்கீடு

****65298—**டாக்டர் மு. சீனியம்மாள்,*

திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில், பழையவாயல் கிராமத்தில் மத்திய அரசு ஆரம்பிக்க உள்ள "ஜிர்கோனியம் ஸ்பாஞ்ச்" **(Zirconium Sponge Project)** *திட்டத்திற்கு அரசு எவ்வளவு நிலக்கிரயம் பெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்துள்ளது ?*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசால் நடத்தப்படுகிற பிராஜக்ட்டுக்கு மத்திய அரசின் வேண்டுகோளின்படி, அரசு, தனியார் நிலங்களை எடுப்பதிலும், அரசு நிலங்களைக் கொடுப்பதிலும் 1 கோடியே 23 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்து கொடுத்தே சிவந்த கரத்துக்கு சொந்தக்காரராக, நானிலம் போற்றும் நல்லாட்சி நடத்துகிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் மத்திய அரசால் ஆரம்பிக்கப்படவுள்ள